**கூடுதல் மாவட்ட மற்ம் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்), தென்காசி**

**முன்னிலை.- திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தென்காசி.**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 117/2018**

**(CNR No.TNTS01-000218-2018)**

(ஆலங்குளம் நீதித்துறை நடுவர் திரு.தி.பிச்சைராஜன், பி.காம்., எல்.எல்.பி., அவர்களால் முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண் 47/2017 ஆனது 06.02.2018 ம் தேதியன்று மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| 1.காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | காவல் ஆய்வாளர்,<br>ஊத்துமலை காவல் நிலையம்,<br>ஊத்துமலை கா.நி.கு.எண். 56/2016 |
| 2. எதிரியின் பெயர்<br>3. தந்தையாரின் பெயர்<br>4. தொழில்<br>5. குடியிருப்பு<br>6. வயது | நல்லமலை, வயது 43/2016,<br>த/பெ. சோணமுத்து தேவர்,<br>வீரணத்தேவர் தெரு,<br>கவுண்டன்பட்டி,<br>உசிலம்பட்டி,<br>மதுரை மாவட்டம். |
| 7. சம்பவ நாள் | 29.02.2016 |
| 8. முறையீடு நாள் | 05.03.2016 |
| 9. எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 06.03.2016 |
| 10. பிணையில் விடுவித்த நாள் | 18.04.2016 |
| 11.மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | 06.02.2018 |
| 12. விசாரணை துவக்க நாள் | 07.06.2019 |
| 13.எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 14. எதிரியின் வாதம் | குற்றவாளி இல்லை |
| 15. விசாரணை முடிவுற்ற நாள் | 12.03.2026 |
| 16. தீர்ப்பு தேதி | 18.03.2026 |
| 17. தீர்ப்பு | முடிவாக எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A) கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை மேற்படி பிரிவுகள் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இந்த வழக்கில் பி.ஆர். 3/2024 ல் தாக்கல் செய்யப் பட்டுள்ளதும், சா.பொ.1 முதல் சா.பொ.4 ஆகக் குறியீடு செய்யப் பட்டுள்ளதுமான முறையே 380 ரிவால்வருக்குரிய காலி கேஸ்கள் 3, 380 ரிவால்வர் தோட்டா இரண்டு, ரிவால்வர் கைதுப்பாக்கி ஒன்று Enfield No.2 MM என எழுதப்பட்டது, ரிவால்வர் கைத்துப்பாக்கி குண்டு ஒன்று இவைகளை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் Deputy Inspector General of Police, Special Security Group, Chennai வசம் ஒப்படைக்கவும், சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள Dancing Mayur என்று எழுதப்பட்டுள்ள வாடாமல்லி கலர் புளூ, மஞ்சள் கலரில் உள்ள சுமார் 25 சிப்லா பிடிக்கக்கூடிய சருகை பை ஒன்றை வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

| | |
|---|---|
| 18. தாமதத்திற்கான விளக்கம் | -- |

இந்த வழக்கானது 12.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.மாரிக்குட்டி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.ஏ.காத்தபாண்டி அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கின் புகார்தாரரான தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வம் ஆலங்குளத்தைச் சேர்ந்தவர் என்றும், காயம்பட்ட நபரான வெள்ளத்துரை, த/பெ.மாடசாமி என்பவர் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையில் பணிபுரிந்து வருவதாகவும், இருவரும் உறவினர்கள் என்றும், மேற்படி தெய்வசுந்தர பாண்டியனுக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் அவருக்கு பணத்தின் தேவையிருந்தது என்றும், வெள்ளதுரையின் நண்பரான மாரியப்பன் என்பவர் தெய்வசுந்தரபாண்டியனுடன் தொடர்பில் இருந்ததாகவும், 2016ம் வருடம் ஜனவரி மாதம் பணத்தின் மீது இருந்த ஆசையால், மேற்படி மூவரும் எதிரியை கொடைக்கானலில் சந்தித்து எதிரி கோடிக்கணக்கில் கருப்புப் பணம் தருவதாகக் கூறியதன் பேரில் வெள்ளதுரை ஒரு லட்சமும், தெய்வசுந்தரபாண்டியன் நான்கு லட்சமும் கொடுத்ததாகவும், மேலும் மேற்படி மூவரும் எதிரியிடம் இரண்டு லட்சம் ரூபாய் உசிலம்பட்டியில் வைத்து கொடுத்ததாகவும், எதிரி அவர் சொன்னபடி கருப்புப் பணமும் கொடுக்கவில்லை, மேற்படி நபர்கள் கொடுத்த பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், எனவே 29.02.2016 அன்று புகார்தாரர் எதிரியை ராஜபாளையத்திற்கு வரச் சொன்னதன் பேரில் அவர் வந்ததாகவும், அதே நாள் 17.15 மணிக்கு புகார்தாரரும், வெள்ளதுரையும் எதிரியை டி.என். 01 வி 7975 என்ற வாகனத்தில் ஏற்றி தட்டப்பாறைக்கு கிழக்குப் பக்கம் உள்ள சாட்சி கணபதித்தேவர் தோட்டத்திற்கு கூட்டிச் சென்றதாகவும், 20.00 மணிக்கு வெள்ளதுரை எதிரியிடம் பணத்தைக் கேட்டதாகவும், இதனால் கோபமடைந்த எதிரியானவர் வெள்ளத்துரையை அசிங்கமான வார்த்தைகளால் ஏசி, அவர் வைத்திருந்த 6 அறை 0.380 இன்ச் உள்ள கேலிபர் துப்பாக்கியை எடுத்து வெள்ளத்துரையை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவரது வயிற்றில் இடது பக்கம்,

இடது தொடை, வயிற்றின் கீழ் பக்கம் காயங்கள் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாகவும், எனவே எதிரியானவர் இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது ஊத்துமலை காவல் ஆய்வாளர், ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பேரில் கற்றறிந்த நடுவர் அவர்கள் இவ்வழக்கினை முதல்நிலை விசாரணை வழக்கு எண்.47/2017 ஆக கோப்பிற்கு எடுத்து, பின்னர் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 207 ன்படி வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரணை செய்யப்படக்கூடியது என்பதால், வழக்கானது, குவிமுச பிரிவு 209 ன் கீழான நடைமுறைகளைப் பின்பற்றி மேல் விசாரணையின் பொருட்டு திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அமர்வு வழக்குஎண்.117/2018 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், தென்காசிக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண். 11472/2022 ல் 19.01.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3) எதிரி இந்நீதிமன்றத்தின் முன்பு ஆஜரானதும், கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் மற்றும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆகியோர்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்த பின்னரும், குவிமுச பிரிவு 228(1)(ஆ)ன் கீழ் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால், குவிமுச பிரிவு 228(2) ன் கீழ் எதிரியிடம் இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை எனக் கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசு தரப்பில், எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு 16 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு 18 சான்றாவணங்களும், 5 சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:**

(i) அ.சா.15 திருமதி.சாந்தி, ஊத்துமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, 05.03.2016 அன்று காலை 8.30 மணிக்கு அ.சா.1 தெய்வசுந்தரபாண்டியன் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 56/2016 இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 3 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.7. அச்சு முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். அ.சா.16 ஆய்வாளர் திரு.செந்தாமரைக் கண்ணன் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 06.03.2016 அன்று காலை 6 மணிக்கு சம்வயிடமான தட்டப்பாறையில் உள்ள அ.சா.3 கணபதிதேவர் என்பவரது தென்னந்தோப்பிற்கு சென்று அ.சா.8 ஜெயபால் மற்றும் சாட்சி சாமியாத்தேவர் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.9, மாதிரிவரைபடம் அ.சா.ஆ.10 தயார் செய்து, சம்பவயிடத்தில் காணப்பட்ட துப்பாக்கி தோட்டாக்களின் காலி கேஸ்கள் 3 எண்ணத்தை அ.சா.ஆ.11 அத்தாட்சியில் கைப்பற்றினார். துப்பாக்கி தோட்டாக்களின் காலி கேஸ்கள் சா.பொ.1 ஆகும். பார்வை மகஜர், அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் அ.சா.16 ஆய்வாளர், எதிரி நல்லமலையை 06.03.2016 அன்று 14.30 மணிக்கு திருநெல்வேலி ஹைகிரவுண்ட் மருத்துவமனை அருகில் வைத்து அ.சா.12 பரமசிவன் மற்றும் சாட்சி காளித்தேவர் முன்பு விசாரிக்க, எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன்படி அவர் கைப்பையில் இரண்டு ரிவால்வர் தோட்டாக்களும், தெய்வம் என்பவர் கொடுத்த 10 காசோலைகளையும் ஆஜர் செய்வதாகச் சொன்னார். அதன்படி இரண்டு ரிவால்வர் தோட்டாக்களை அ.சா.ஆ.13 அத்தாட்சியில் கைப்பற்றினார். இரண்டு தோட்டாக்கள் சா.பொ.2 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12 ஆகும். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் உள்ள அ.சா.12 ன் கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சாட்சிகள் தெய்வசுந்தரபாண்டியன், ஜெயபால், சாமித்தேவர், பெண் உதவி ஆய்வாளர் திருமதி. சாந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். 12.03.2016 அன்று 09.15 மணிக்கு திருநெல்வேலி டவுணிற்கு அருகில் உள்ள எதிரி மாரியப்பன் பராமரித்து வந்த தோட்டத்தின் வேலிக்கு அருகில் சுமார் அரை அடி ஆழத்தில் ஒரு சருகை பையில் இருந்த கைத்துப்பாக்கி ஒன்றையும், டேன்சிங் மேயர் என்று எழுதியிருந்த

வாடாமல்லி கலர் புளு, மஞ்சள் கலரில் உள்ள சருகை பையையும், அத்தாட்சியில் கைப்பற்றினார். துப்பாக்கி சா.பொ.4. சருகைப்பை சா.பொ.5 ஆகும். பின்னர் 30.03.2016 அன்று 11 மணிக்கு அத்தாட்சி மூலம் திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் வைத்து காயம்பட்ட அ.சா.10 வெள்ளத்துரை என்பவரிடமிருந்து ஆப்ரேஷனின்போது அவரது உடலிலிருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டை அ.சா.ஆ.14 அத்தாட்சி மூலம் மருத்துவர்கள் திரு.பால், கிஷான் கில்பர்ட் முன்பு கைப்பற்றினார். துப்பாக்கிக் குண்டு சா.பொ.3. பின்னர் அ.சா.10 வெள்ளத்துரை, அ.சா.9 மாரியப்பன், அ.சா.2 கணேசன், அ.சா.3 கணபதிதேவர், சாட்சி சபரி செல்வம், அ.சா.4 வெள்ளத்துரை, த/பெ.சாமித்துரை, அ.சா.5 மாரியப்பன், அ.சா.11 ஸ்ரீரங்கம், அ.சா.6 சிவா என்ற சிதம்பரம், அ.சா.7 விஷ்ணு, அ.சா.1 2 பரமசிவன், சாட்சி காளிச்சாமி, அ.சா.13 மருத்துவர் ஸ்ரீதரன் மற்றும் காவல்துறை தரப்பு சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்குச் சொத்துக்களை அ.சா.ஆ.15 வரிசையான படிவம் 91(4 எண்ணம் ) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினார். அ.சா.13 மருத்துவர் அ.சா.10 வெள்ளத்துரைக்கு சிகிச்சை செய்து வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் அ.சா.16 ஆய்வாளர் செந்தாமரைக் கண்ணன் அவர்கள் வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்க நீதித்துறை நடுவர், தென்காசி அவர்களுக்கு அ.சா.ஆ.16 வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். நீதிமன்ற உத்தரவின்படி வழக்குச் சொத்துக்களை அ.சா.14 திரு.தாசன், காவலர் பெற்று சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து, அறிக்கையைப் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அ.சா1.4 க்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ.6 ஆகும். தடய அறிவியல் துறை அறிக்கை அ.சா.ஆ.17 ஆகும். பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A)ன் கீழ் மாற்றியமைத்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.18 ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, விசாரணையை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6) விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக அமைந்த சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் எடுத்துக் கூறி வினவிய போது, எதிரி அவைகளை பொய் சாட்சியம் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டு, எதிரி தரப்பு முடித்துக் கொள்ளப்பட்டது.

**7)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றின் வாயிலாக அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8)** கற்றறிந்த கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 16 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு 18 சான்றாவணங்கள் மற்றும் 5 சான்றுப் பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மருத்துவர் அ.சா.13 ன் சாட்சியம் மற்றும் அவர் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.5 மூலம் அ.சா.10 வெள்ளத்துரைக்கு காயம் ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதன்படி எதிரியானவர் உரிமம் பெறாமல் துப்பாக்கி வைத்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்பட்டு, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் மூலம் தெளிவாக, சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**9)** மாறாக எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள பிரதான சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள் என்றும், மற்ற சாட்சிகள் மருத்துவர் மற்றும் காவல்துறை தரப்பு சாட்சிகள் என்றும், எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், வழக்கானது ஒருதலைபட்சமாக புலன் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியையும் குற்ற சம்பவத்தையும் இணைக்க சாட்சியங்கள் எதுவும் இல்லை என்றும், எனவே எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**10)** வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தபோது, அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரியை புகார்தாரரும், காயம்பட்ட நபரான வெள்ளத்துரை இருவரும் கொடைக்கானலில் சந்தித்து, எதிரி கோடிக்கணக்கில் கருப்புப் பணம் தருவதாகக்

கூறியதன் பேரில் வெள்ளதுரை ஒரு லட்சமும், புகார்தாரர் நான்கு லட்சமும் கொடுத்ததாகவும், மேலும் எதிரியிடம் இரண்டு லட்சம் ரூபாய் உசிலம்பட்டியில் வைத்து கொடுத்ததாகவும், எதிரி அவர் சொன்னபடி கருப்புப் பணத்தையும், மேற்படி நபர்கள் கொடுத்த பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், எனவே 29.02.2016 அன்று புகார்தாரர் எதிரியை ராஜபாளையத்திற்கு வரச் சொன்னதன் பேரில் அவர் வந்ததாகவும், அதே நாள் 17.15 மணிக்கு புகார்தாரரும், வெள்ளதுரையும் எதிரியை டி.என். 01 வி 7975 என்ற வாகனத்தில் ஏற்றி தட்டப்பாறைக்கு கிழக்குப் பக்கம் உள்ள சாட்சி கணபதித்தேவர் தோட்டத்திற்கு கூட்டிச் சென்றதாகவும், 20.00 மணிக்கு வெள்ளதுரை எதிரியிடம் பணத்தைக் கேட்டதாகவும், இதனால் கோபமடைந்த எதிரியானவர் வெள்ளத்துரையை அசிங்கமான வார்த்தைகளால் ஏசி, அவர் வைத்திருந்த 6 chambered 0.380 inch உள்ள calibre துப்பாக்கியை எடுத்து வெள்ளத்துரையை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவரது வயிற்றில் இடது பக்கம், இடது தொடை, வயிற்றின் கீழ் பக்கம் காயங்கள் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாகவும், எனவே எதிரியானவர் இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**11)** அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதன் பொருட்டு 16 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, 18 சான்றாவணங்களும், 5 சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரரான தெய்வசுந்தரபாண்டியன் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியைத் தெரியாது என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு தனது பெரியம்மா மகன் வெள்ளத்துரைக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக அவரது மனைவி தகவல் சொன்னதன் பேரில், திருநெல்வேலியில் உள்ள ஷீபா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தாகவும், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது கிடையாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தின்போது காயம்பட்டதாக கூறப்படும் வெள்ளத்துரை அ.சா.10 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.10 வெள்ளத்துரை தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தில் தனக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்று கூறியுள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 கணேசன், அ.சா.3 கணபதித்தேவர், அ.சா.4

வெள்ளத்துரை, அ.சா.5 மாரியப்பன், அ.சா.6 சிவா என்ற சிதம்பரம், அ.சா.7 விஷ்ணு, அ.சா.9 மாரியப்பன், அ.சா.11 ஸ்ரீரங்கம் ஆகியோர்கள் தங்கள் சாட்சியங்களில் எதிரி நல்லமலையைத் தெரியாது மற்றும் வழக்கு சம்பவம் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அதேபோல் பார்வை மகஜர், அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.8 ஜெயபால் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.12 பரமசிவம் ஆகியோர்களும் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் மேற்படி கையொப்பங்களை போட்டுக் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே மேற்கண்டவாறு அ.சா.1 முதல் அ.சா.12 வரையான வழக்கின் பிரதான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எனவே மேற்படி சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) அடுத்து இவ்வழக்கில் காயம்பட்டதாகக் கூறப்படும் சாட்சியான அ.சா.10 வெள்ளத்துரைக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கியதாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.13 மருத்துவர் ஸ்ரீதரன் தனது சாட்சியத்தில் 01.03.2016 அன்று திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் வைத்து அ.சா.10 வெள்ளத்துரைக்கு சிகிச்சை அளித்ததாகவும், அவரது இடது தொடையில் துளையிடப்பட்ட நிலையிலான சிதைந்த காயம் 2 x1x 1 செமீ அளவிலும், துளையிடப்பட்ட நிலையிலான சிதைந்த காயம் வயிற்றின் இடது கீழ்பகுதியில் 2 x1x 1 செமீ அளவிலும், பரவலான ஊமைக் காயம் வயிற்றின் நடுப்பகுதியின் கீழ்பகுதியில் 16 x12 செமீ அளவிலும், மார்பின் முன்புறம், இடதுபுறம் வலியிருப்பதாகக் கூறியதாகவும், 1வது காயம் சாதாரண காயம் என்றும், 2 முதல் 4 வரையிலான காயங்கள் கொடுங்காயங்கள் என்று கருத்து கூறி காயச்சான்று அ.சா.ஆ.5 வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.13 மருத்துவர் தனது சாட்சியத்தில் மேற்படி வெள்ளத்துரை தன்னிடம் 29.02.2026 அன்று இரவு 8 மணியளவில் அவரது சொந்த ஊருக்கு அருகில் உள்ள கிணற்றின் ஓரமாக நடந்து செல்லும்போது தவறி கிணற்றினுள் விழுந்ததால் காயம்பட்டதாக கூறியதாக அரசு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.16 புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் 30.03.2016 அன்று 11 மணிக்கு அத்தாட்சி மூலம் திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் வைத்து காயம்பட்ட அ.சா.10 வெள்ளத்துரை என்பவரிடமிருந்து ஆப்ரேஷனின்போது அவரது உடலிலிருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டை

அ.சா.ஆ.14 அத்தாட்சி மூலம் மருத்துவர்கள் திரு.பால், கிஷான் கில்பர்ட் முன்பு கைப்பற்றியதாகவும் துப்பாக்கிக் குண்டு சா.பொ.3 என்று சாட்சியம் அளித்திருந்தாலும், அ.சா.10 வெள்ளத்துரைக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவரது உடலிலிருந்து குண்டுகள் எடுக்கப்பட்டது என்பதற்கான எந்த சாட்சியமும், சான்றாவணமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் காயம்பட்ட நபராக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.10 வெள்ளத்துரை தனக்கு வழக்கு சம்பவத்தின்போது காயம் எதுவும் ஏற்படவில்லை என்று அ.சா.13 மற்றும் அ.சா.16 ன் சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்படாக சாட்சியம் அளித்திருப்பது இவ்வழக்கின் அடித்தளத்தையே பாதிப்பதாக உள்ளது.

**13)** மேற்படி சாட்சிகள் நீங்கலாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.14 திரு.தாசன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து அறிக்கை பெற்றது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.15 திருமதி.சாந்தி, உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார்மனுவைப் பெற்று, வழக்கு பதிவு செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 கொடுத்ததாகக் கூறப்படும் புகார்மனு அ.சா.ஆ.6 ஆகவும், அச்சுமுதல் தகவலறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் அ.சா.15 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படிஆவணங்களைப் பரிசீலனை செய்யும்போது, அரசு தரப்பில் வழக்கு சம்பவம் 29.02.2016 அன்று நடைபெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில், புகாரானது 05.03.2016 அன்று அதாவது ஆறுநாட்கள் காலதாமதாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி காலதாமத்திற்கு அரசு தரப்பில் விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. மேலும், புகாரினை கொடுத்ததாக கூறப்படும் அ.சா.1 தெய்வசுந்தரபாண்டியன் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது கிடையாது என்று சாட்சியம் அளித்திருப்பதும் அரசு தரப்பு வழக்கினை வலுவிழக்கச் செய்வதாகவே உள்ளது.

**14)** அடுத்து, அ.சா.16 திரு.செந்தாமரைக் கண்ணன், ஆய்வாளர், இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து, அதாவது பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து சம்பவயிடத்திலிருந்து அத்தாட்சியில் துப்பாக்கி தோட்டாக்களின் காலி கேஸ்களை கைப்பற்றியது, எதிரியைக் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அவர் ஆஜர் செய்த ரிவால்வர் தோட்டாக்கள் இரண்டை அத்தாட்சியில் கைப்பற்றியது பற்றியும் மற்றும் மாரியப்பன் என்பவர் தோட்டத்திலிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கியை அத்தாட்சியில் கைப்பற்றியது பற்றியும், அ.சா.10 வெள்ளத்துரைக்கு அறுவை சிகிச்சை

செய்து எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டினை அத்தாட்சியில் கைப்பற்றியது பற்றியும், வழக்குச் சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியது குறித்தும், தடய அறிவியல் ஆய்வறிக்கையைப் பெற்று, வழக்கின் சட்டப்பிரிவினை மாற்றி, எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அ.சா.16 ன் சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் தனி நபர் சாட்சியத்தின் மூலம் உறுதியூட்டப்படவில்லை. பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் கையொப்பம் செய்த நபர்களாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.8 ஜெயபால் மற்றும் அ.சா.12 பரமசிவன் ஆகிய இருவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எதிரி கைது, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது உரிய சாட்சி, சான்றாவணங்கள் வாயிலாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் நிரூபிக்கப்படவில்லை. எதிரி மீது Arms Act 1959 பிரிவு 25(1)(1A) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், எதிரி கைவசம் தடைசெய்யப்பட்ட ஆயுதம் வைத்திருந்தார் என்பது மேற்கண்டவாறு உரிய சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. வழக்கின் பிரதான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எதிரியையும், குற்ற சம்பவத்தையும் இணைக்க எந்த நேரடி, சாட்சியமும் இல்லை. எனவே மேற்கண்ட அனைத்து அம்சங்களையும் சீர் தூக்கிப் பார்க்கையில், எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பானது சாட்சியங்கள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் வாயிலாக, சந்தேகத்திற்கப்பாற்பட்டு, நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது என்றும் முடிவுசெய்கிறது.

**18)** முடிவாக எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 307 மற்றும் Arms Act 1959 பிரிவு 25(1)(1A) கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை மேற்படி பிரிவுகள் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**19)** இந்த வழக்கில் பி.ஆர். 3/2024 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், சா.பொ.1 முதல் சா.பொ.4 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான முறையே 380 ரிவால்வருக்குரிய காலி கேஸ்கள் 3, 380 ரிவால்வர் தோட்டா இரண்டு, ரிவால்வர் கைதுப்பாக்கி ஒன்று Enfield No.2 MM என எழுதப்பட்டது, ரிவால்வர் கைத்துப்பாக்கி குண்டு ஒன்று இவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு

இருப்பின் அதற்குப் பின்னர் Deputy Inspector General of Police, Special Security Group, Chennai வசம் ஒப்படைக்கவும், சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள Dancing Mayur என்று எழுதப்பட்டுள்ள வாடாமல்லி கலர் புளு, மஞ்சள் கலரில் உள்ள சுமார் 25 சிப்லா பிடிக்கக்கூடிய சருகை பை ஒன்றை வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 18 ம்ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்படுகின்றது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.03.23 16:14:53 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தென்காசி

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திரு.தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வம்

அ.சா.2 திரு.கணேசன்

அ.சா.3 திரு.கணபதிதேவர் என்ற கணபதி பாண்டியன்

அ.சா.4 திரு.வெள்ளத்துரை, த/பெ. சாமித்துரை

அ.சா.5 திரு.மாரியப்பன்,த/பெ. சங்கரபாண்டியன்

அ.சா.6 திரு. சிவா என்ற சிதம்பரம்

அ.சா.7 திரு.விஷ்ணு

அ.சா.8 திரு. ஜெயபால்

அ.சா.9 திரு. மாரியப்பன், த/பெ. ஸ்ரீரெங்கம்

அ.சா.10 திரு.வெள்ளத்துரை, த/பெ. மாடசாமித் தேவர்

அ.சா.11 திரு.ஸ்ரீரெங்கம்

அ.சா.12 திரு.பரமசிவன்

அ.சா.13 மருத்துவர் திரு.ஸ்ரீதரன், ஷிபா மருத்துவமனை, திருநெல்வேலி

அ.சா.14 திரு.தாசன், காவலர், ஊத்துமலை காவல் நிலையம்

அ.சா.15 திருமதி.சாந்தி, உதவி ஆய்வாளர், ஊத்துமலை காவல் நிலையம்

அ.சா.16 திரு.செந்தாமரைக் கண்ணன், ஆய்வாளர், ஊத்துமலை காவல் நிலையம்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 06.03.2016 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 06.03.2016 | அத்தாட்சியில் உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 06.03.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.12 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 06.03.2016 | அத்தாட்சியில் உள்ள அ.சா.12 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 10.06.2016 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | 11.07.2016 | கடவுச் சீட்டு |
| அ.சா.ஆ 7 | 05.03.2016 | புகார் |
| அ.சா.ஆ.8 | 05.03.2016 | அச்சுமுதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ 9 | 06.03.2016 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.10 | 06.03.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | 06.03.2016 | அத்தாட்சி 6.45 மணிக்கு தயாரிக்கப்பட்டது |
| அ.சா.ஆ.12 | 06.03.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.13 | 06.03.2016 | அத்தாட்சி 15.30 மணிக்குதயார் செய்யப்பட்டது |
| அ.சா.ஆ.14 | 30.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.15 வரிசை | -- | படிவம் 91(4 எண்ணம்) |
| அ.சா.ஆ.16 | 26.04.2016 | வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்வு செய்வதற்காக அ.சா.16 நீதிமன்றத்தில் அளித்த வேண்டுகோள் கடிதம் |
| அ.சா.ஆ.17 | 08.06.2016 | தடய அறிவியல்துறை அறிக்கை |
| அ.சா.ஆ.18 | 29,07,2016 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்-**

| | |
|---|---|
| சா.பொ.1 | 380 ரிவால்வருக்குரிய காலி கேஸ்கள் 3 |
| சா.பொ.2 | 380 ரிவால்வர் தோட்டா இரண்டு |
| சா.பொ.3 | ரிவார்வர் கைதுப்பாக்கி ஒன்று Enfield No.2 MM என எழுதப்பட்டது |

| | |
|---|---|
| சா.பொ.4 | ரிவால்வர் கைத்துப்பாக்கி ஒன்று |
| சா.பொ.5 | Dancing Mayur என்று எழுதப்பட்டுள்ள வாடாமல்லி கலர் புளூ, மஞ்சள் கலரில் உள்ள சுமார் 25 சிப்லா பிடிக்கக்கூடிய சருகை பை |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்-- இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Date: 2026.03.23 16:15:01 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தென்காசி,

டுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்

தென்காசி

அமர்வு வழக்கு எண் 117/2018

தீர்ப்புரை

நாள் 18.03.2026

வரைவு/நேரிய